# DDR ஆய்வுகளின் விரிவாக்கமும் யுத்தத்திற்கு பின்னரான இலங்கையின் அனுபவங்களும்

# Expanding the Researches in DDR and Experience from Post-war Sri Lanka


**Mr. V.Kamalasiri (1) and Mr. MM.Fazil (2)**

(1) Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka.
(2) Department of Social Sciences, South Eastern University of Sri Lanka.
(fazilmoh@gmail.com)



**ஆய்வுச் சுருக்கம்**

*இக்கட்டுரை DDR (ஆயுதக் களைவு, குழுக்களைக் கலைத்தல், மீள ஒருங்கிணைத்தல் - Disarmament, Demobilization and Reintegration) செயன்முறை பற்றிய ஓர் ஆய்வாகும். மேலும் DDR குறித்த முன்னைய ஆய்வுகளின் சான்றுகள் மீளாய்வுக்குட்படுத்தப்படுவதுடன் அது எவ்வாறு பரவலடைந்துள்ளது என்பதனையும் வெளிக்கொணர்கிறது. அத்துடன் யுத்தத்திற்கு பின்னரான இலங்கையில் DDR செயன்முறை எவ்வாறு காணப்படுகிறது என்பது குறித்த நடைமுறை ஆய்வுகள் மீளாய்வுக்குட்படுத்தப்படுவது இன்றியமையாததாகும். அவ்வகையில் இக்கட்டுரை பண்புரீதியான முறையியலின் அடிப்படையில் விவரணப்பகுப்பாய்வன் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. DDR செயல்முறை எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டுமென்று ஆய்வுகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் நடைமுறைரீதியில் அவ்வரையறைகள் ஒழுங்குமுறையாகப் பின்பற்றப்படுவதில்லை. அத்துடன் இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான DDR செயன்முறையானது அரசாங்கத்தின் அதிகரித்த தலையீடு காரணமாக ஒரு சிக்கல் நிறைந்த செயல்முறையாக இடம்பெற்றிருக்கின்றதென்பது இவ்வாய்வின் முடிவாகும்.*



*பிரதான சொற்கள்: மோதல், ஆயுதக் களைவு, யுத்தம், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்*


**அறிமுகம்**

சமாதானத்தை கட்டியெழுப்பும் செயன்முறையானது சர்வதேச சமூகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு நடவடிக்கையாகும். யுத்தத்தின் பின்னர் மோதல் நிலையில் இருந்து ஜனநாயக வழிமுறைக்கு திரும்புவதற்கு அவசியமான நீண்டகால செயன்முறையாக இது கொள்ளப்படுகிறது. யுத்தத்திற்கு பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயன்முறையானது கல்வியலாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களினால் ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வுகள் கெடுபிடி யுத்தத்தின் பின்னரான 1990ஐ தொடர்ந்து முக்கிய இடத்தினை பெற்றிருப்பதனை அவதானிக்கலாம். அந்தவகையில் சாமாதானத்தை கட்டியெழுப்பும் செயன்முறையில் DDR குறித்த ஆய்வுகள் பல மேற்கெள்ளப்பட்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது. அதன்படி சமாதானத்தை கட்டியெழுப்புதல் குறித்தும், அதில் DDR செயன்முறையின் பங்களிப்பு குறித்ததுமான கோட்பாட்டு மற்றும் நடைமுறை ரீதியான முன்னைய ஆய்வுகள் மற்றும் ஆய்வு அணுகுமுறைகள் என்பன மீள்பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு அவற்றின் ஆய்வு இடைவெளிகள் அடையாளப்படுத்தப்படுவதுடன் யுத்தத்துக்குப் பின்னரான இலங்கையின் DDR செயன்முறை குறித்தும் கவனம் செலுத்தப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

DDR, சர்வதேச சமூகத்தினால் அல்லது நிறுவனங்களினால் அரசின் ஒத்துழைப்புடன் NGOs (அரச சார்பற்ற நிறுவனங்கள்), INGOs (சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள்)போன்றவற்றால் மேற்கொள்ளப்பட வேண்டியதாகும். இலக்கிய மீளாய்வின் அடிப்படையில் பெற்றுக் கொண்ட தகவல்களின்படி DDR செயன்முறையானது ஒரு முழுமையான செயற்பாடாக அமையாததுடன் ஆய்வாளர்களின் முடிவுகளும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவைகளாகவும் தெளிவற்ற தன்மையையும் பிரதிபலிக்கின்றன. இலங்கையை பொறுத்தவரை DDR செயன்முறை என்பது இலங்கை அரசாங்கத்தின் யுத்த வெற்றியினைத் தொடர்ந்து முழுமையான சமாதானத்தை கட்டியெழுப்பும் செயன்முறையின் ஒரு பகுதியாக மேற்கொள்ள வேண்டியதாக அமைந்தது. எனினும்இச்செயன்முறையானது அரசாங்கத்தினால் பாதுகாப்பு பிரிவினருடன் இணைந்து

மேற்கொள்ளப்பட வந்தமையினால் குறித்த DDR செயன்முறைத் திட்டம், அதன் அமுலாக்கம் என்பனவற்றின் செயன்முறையானது, சர்வதேச சமூகத்தின் பார்வையில் அச்செயன்முறை சர்வதேச தரத்திலான நெறிமுறைகளைக் கொண்டதா என்கின்ற சந்தேகத்துக்குள்ளானது. இது தொடர்பான ஆய்வுகளும் தெளிவான முடிவுகளை முன்வைப்பதில் பின்நிற்கின்றன. இந்நிலையில் சர்வதேச ரீதியாக கட்டியெழுப்பப்படுகின்ற DDR செயன்முறை பற்றிய சிந்தனை மற்றும் நெறிமுறைகள் இலங்கையில் யுத்தத்தின் பின் சமாதான செயன்முறையின் ஓர் பகுதியாக இடம் பெற்றதா, அவ்வாறு இடம் பெற்றது எனின் அதன் திட்டமிடல், கால வரையறை, அமுலாக்கம், விளைவுகள் உள்ளிட்ட செயற்பாடுகளின் வினைத்திறன் என்பவற்றையே இவ்வாய்வு பிரதான பிரச்சினையாகக் கொண்டுள்ளது.

**நோக்கம்**

இவ்வாய்வானது DDR எனும் எண்ணக்கரு பற்றிய ஆய்வுகளின் விரிவாக்கத்தை இனங்காணுவதுடன் அதனை இலங்கையின் யுத்தத்திற்கு பின்னரான அனுபவங்களோடு தொடர்புபடுத்தி விளங்கிக் கொள்ளுதல் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வானது இரண்டாம் நிலைத்தரவுகளின் மீளாய்வுகளின் ஊடாக விவரண பகுப்பாய்வு முறையில் மேற்கொள்ளப்படுகின்றது. DDR தொடர்பான கல்வியியலாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களின் ஆய்வுக்கட்டுரைகள், புத்தகங்கள் உள்ளடங்கலான 15 முன்னைய ஆய்வுகள் மீளாய்வு செய்யப்பட்டு அவற்றின் ஆய்வு இடைவெளிகள் அடையாளப்படுத்தப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்படுகின்றன.

**முடிவும் கலந்துரையாடலும்**

DDR தொடர்பில் அதிகமான இலக்கியங்கள் கோட்பாட்டு வடிவிலும் நடைமுறை ரீதியான ஆய்வுகளாகவும் சர்வதேச அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை பொதுவாக சமாதானத்தைக் கட்டியெழுப்பலில் முக்கிய அம்சமாக DDR காணப்படுவதை வெளிப்படுத்துகின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டு தேசிய மற்றும் சர்வதேச அளவிலான ஆய்வுகள் விரிவடைந்துள்ளதை அவதானிக்கலாம். அந்தவகையில் DDR தொடர்பானஆய்வுகளின் விரிவாக்கத்தை பின்வருமாறு தொகுத்து நோக்க முடியும்.

ஐக்கிய நாடுகள் தாபனமானது சமாதானத்தை கட்டியெழுப்புதலை பல்வேறு நிகழ்ச்சி திட்டங்கள் மூலமாக மேற்கொள்ள முன்வந்தது. இதன் பிரகாரம் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் Boutros-Boutros Ghali "சமாதானத்திற்கான நிகழ்ச்சி நிரல்" (Agenda for Peace) என்பதன் ஊடாக மோதலுக்கு பின்னர் சமாதானத்தை கட்டியெழுப்புவதன் அவசியத்தை விளக்குகிறார். மேலும் Ghali தனது அறிக்கையில் ஆயுத மோதலுக்குப் பின்னர் யுத்தத்தில் ஈடுபட்ட தரப்பினரிடம் இருந்து ஆயுதங்களை களைதல், சட்டத்தின் ஒழுங்கை மீள நடைமுறைப்படுத்துதல், அகதிகள் நாடு திரும்புதல், பாதுகாப்பு பிரிவினருக்கு ஆலோசனைகளையும் பயிற்சிகளையும் வழங்குதல் போன்ற விடயங்களையும் உள்ளடக்கியுள்ளார்.வளர்ந்து வரும் கருத்தியலான சமாதானத்தை கட்டியெழுப்புதல் என்பதற்கு UN இன் ஆரம்ப வரைவிலக்கணங்களின்படி "மோதலுக்கான அடிப்படை காரணிகளை கண்டறிந்து அதனை முற்றுமுழுதாக இல்லாமல் செய்வதற்கான கட்டமைப்பினை மேற்கொள்வதன் ஊடாக மீண்டும் மோதலுக்குள் சென்றுவிடாமல் தடுப்பதற்கான நடவடிக்கையாகும்". இது Ghaliஇன் ஆரம்பக்கட்ட வரைவிலக்கணமாக அல்லது விளக்கமாக கொள்ளப்படுகிறது. எனினும் இது ஓர் தத்துவார்த்த கட்டமைப்பிலான கருத்தையே தருகிறது என்று சில ஆய்வாளர்கள் கருத்துவெளியிடுகின்றனர்(Call 2004:2, Keating and Andy 2004).

UN இன் எழுத்துக்களின்படி ஆயுதக் களைவு, குழுக்களைக் கலைத்தல், மீள ஒருங்கிணைத்தல (DDR) என்பது முக்கியமான கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முன்னாள் போராளிகள் (Ex-combatants) குறித்த தொடர் விசயமாக அமைவதுடன் இது முழு சமாதான செயன்முறையினதும் ஓர் பகுதியாகும்(Anan 1998).

DDR செயன்முறை பற்றிய கருத்து விளக்கம், அதன் முக்கியத்துவம், செயன்முறை தொடர்பிலான விதிமுறைகள் ஐக்கிய நாடுகள் சபையினால் அறிக்கைப்படுத்தப்பட்டதன் மூலம் ஓர் குறித்த எண்ணக்கருவாக வளர்ச்சி பெற வருகிறது. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் DDR குறித்த பொதுவழிகாட்டியானது Disarmament, Demobilization and Reintegration of Ex-combatants in a Peace Keeping Environment – Principles and Guidelines எனும் பெயரில் 1999 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதுவே DDR குறித்த ஆரம்ப ஆவணமாக அங்கீகரிக்கப்பட்டது(UN Guideline 2000).

இவ் ஆவணத்தின் பிரகாரம் முக்கியமான அடிப்படை நிபந்தனையாக சமாதான உடன்படிக்கை முக்கியத்துவப்படுத்தப்பட்டு யுத்தத்தின் பின்னரான ஆயுதகளைவு, ஆயுத படைகளை கலைத்தல், போராளிகளை மீள சிவிலியன் நிலைக்கு திருப்புதல், சமூக, பொருளாதார ரீதியாக மீள ஒருங்கிணைத்தல் முதலானவை உள்ளடக்கப்பட்ட தேசத்தின் புணர்நிர்மான தந்திரோபாயங்கள்

உள்ளடங்கியதாக கூறப்பட்டுள்ளது. எனினும் மேலே வழங்கப்பட்ட ஐ.நா தாபனத்தின் DDR குறித்த விளக்கங்களும் விதந்துரைகளும் மோதலுக்கு பின்னரான சமாதானத்தை கட்டியெழுப்பும் செயன்முறை குறித்த ஆய்வுகளுக்கு கோட்பாட்டுக் கருத்தமைப்பு கட்டமைப்பினையே வழங்குவதாக அமைவதுடன் இதன் முன்மைப்படுத்தப்பட்ட உறுதியாக எல்லாவற்றையும் உள்ளடக்கிய சமாதான உடன்படிக்கை என்பது அதன் பிரதான மட்டுப்பாடாக அமைந்து விடுகிறது. நடைமுறை ரீதியான ஆய்வுகள் UN இன் DDR பற்றிய அம்சங்களுடன் முரண்படுவதனை அவதானிக்க முடிகிறது.

றொனால்ட் பரிஸ் (Ronald Paris) என்பவர் UNஇன் சமாதானத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கையானது பணம் செலவிடப்படும் ஒரு செயன்முறை என்றும் அது கருத்தாழம் மிக்க செயற்பாடுகளை வெளிப்படுத்தவில்லை என்றும் விமர்சித்துள்ளார்.

UN இன் DDR பற்றிய எண்ணக்கருவின் நடைமுறைரீதியான சவால்களினால் பல புதிய ஆய்வுகள் DDR பற்றிய ஐ.நாவின் சிந்தனையை நடைமுறை விடயங்களோடு தொடர்புபடுத்தி ஆய்வு செய்து அதன் கோட்பாட்டு தளத்திற்கு செயற்பாட்டு வடிவத்தினை வழங்குவதாக அமைந்தன. அந்தவகையில் S.M.Aliff, Nicole Ball and Lucvande Goor மற்றும் Gleichman, Odenwald, Steenken, Wilkinson ஆகியோரது ஆய்வுகள் ஐ.நா தாபனத்தின் DDR பற்றிய எண்ணக்கருவிற்கு நடைமுறை செயற்பாட்டு வடிவத்தை வழங்க முற்பட்டுள்ளன.

S.M.Aliff எழுதிய 'Disarmament, Demobilization and Reintegration in Post-Conflict Societies' எனும் ஆய்வு கட்டுரையில் விமர்சனப்பகுப்பாய்வு முறை (Critical Analysis Method) மூலம் DDR செயன்முறையின் சாதனைகளை வெளிக்கெண்டுவர முயற்சித்துள்ளார். இதன் பிரகாரம் DDR தொடர்பான எண்ணக்கருப் பகுப்பாய்வு, அதன் முக்கியத்துவம், மோதலுக்கு பிந்திய சூழ்நிலையிலும், அபிவிருத்தியிலும், நடைமுறையிலும் DDR செயன்முறை எவ்வாறு காணப்பட வேண்டும் என்பதனை கோட்பாட்டு ரீதியான அணுகுமுறையிலிருந்து DDR செயன்முறைய நடைமுறை ரீதியான பிரயோகத்திற்குட்படுத்தி முடிவுகளையும் பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளார். நடைமுறையில் செயற்படுத்தும் போது எதிர்நோக்கப்படும் சவால்கள் பற்றிய தெளிவுறுத்தல்கள் மற்றும் அதற்கான பரிந்துரைகள் என்பன போதாமையையே வெளிப்படுத்துகிறது. மேலும் இச்செயன்முறையின் இரு முக்கியமான பகுதிகளான ஆயுதக்களைவு, ஆயுத படைகளைக் கலைத்தல் (DD) என்பன தொடர்பான பார்வை குறைவாகவும் மீள் ஒருங்கிணைத்தல் செயன்முறை முன்னுரிமைப்படுத்தப்பட்டும் ஆய்வு செய்யப்பட்டுள்ளமையானது ஆழமானதும் விரிவானதுமான ஆய்வுகளை இப்பரப்பில் வேண்டி நிற்கிறது (Aliff 2014).

Gleichman, Odenwal, Steenken, Wilkinson ஆகியோரால் 2004 இல் எழுதப்பட்ட 'Disarmament, Demobilization, Reintegration A Practical Field And Classroom Guide' எனும் நுலானது DDR செயன்முறையின் சிந்தனைக்கு செயற்பாட்டு வடிவத்தை வழங்குவதாக அமைகிறது. DDR செயன்முறையின் ஆயுதக்களைவு, ஆயுத படைகளைக் கலைத்தல், மீள்ஒருங்கிணைத்தல் ஆகிய மூன்று அடிப்படை செயன்முறைகள் பற்றிய தெளிவான விளக்கங்களையும் செயற்பாட்டு படிமுறைகளையும் முன்வைத்துள்ளது.மேற்படி ஆய்வானது DDR செயன்முறையை ஒரு அனுபவ ரீதியான அடிப்படையில் கொள்கைகள், நெறிமுறைகளுடன் கூடிய கோட்பாடாக தெளிவுறுத்தினாலும் அதன் தேவை அதிகமானதாக அமைகிறது. இது ஒரு கோட்பாடாக அன்றி செயன்முறையாக அமைவதால் அதன் தேவை விரிவாக்கம் காலத்திற்கு காலம், இடத்திற்கு இடம், சூழ்நிலை என்பவற்றிற்கு பொருந்தியவாறு அமைதல் என்ற விடயம் முக்கியம் பெறுவதாக அமைகிறது. இதனால் DDR செயன்முறை தொடர்பான புதிய நடைமுறை ரீதியான ஆய்வுகளின் தேவையும் விரிவாக்கமும் அவசியமாகின்றன.

இவ்வாறு DDR தொடர்பில் சர்வதேச அளவில் ஆய்வுகள் விரிவாக்கம் பெற்றுச் செல்லும் வேளையில் இலங்கையின் DDR செயன்முறை தொடர்பிலும் ஆய்வுகள் இடம்பெற்றிருப்பதை அவதானிக்கலாம். அவை இலங்கை யுத்தத்தின் பின்னரான ஒரு காலப்பகுதியில் பயணித்துக் கொண்டிருக்கும் வேளையில் இலங்கையின் DDR செயன்முறையின் முக்கியத்தவம், அதன் பொறிமுறைகள் தொடர்பிலும் அதன் தொய்வுகள் தொடர்பிலும் அவதானம் செலுத்துவனவாக உள்ளன. இவற்றைப் பின்வருமாறு நோக்கலாம்.

International Crisis Group (2009) இனால் மேற்கொள்ளப்பட்ட 'Development Assistance and Conflict In Sri Lanka : Lessons from the Eastern province' என்ற ஆய்வானது கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை ஆராய்கின்றது. இவ்வாய்வின் பிரகாரம் கிழக்கில் யுத்தத்தின் பின்னரான DDR செயன்முறையானது சமாதானத்தை கட்டியெழுப்பும் செயன்முறையின் ஒரு பகுதியாக இடம் பெறவில்லை என சுட்டிக்காட்டப்படுகிறது. எனினும் IOM, ILO, USAID முதலான குறிப்பிடத்தக்க ஒரு சில நிறுவனங்களின் பங்களிப்புடன் முன்னாள் TMVP மற்றும் LTTE உறுப்பினர்கள் DDR என்ற பெயரளவிலான

செயன்முறையின் கீழ் தொழிற்பயிற்சிகள், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள், ஏனைய வாழ்வாதாரம் என்பனவற்றுக்கு உட்படுத்தப்பட்டதுடன் சில முன்னாள் போராளிகள் இலங்கை அரசாங்க பாதுகாப்பு பிரிவினருடனும் இணைக்கப்பட்டனர். ஆனால் இச்செயன்முறை பாதிக்கப்பட்ட ஒட்டுமொத்த சமுகத்திற்குமானதாக அமையவில்லை. மாறாக குறிப்பிட்ட சில குழுவினரை கொண்டதாகவே அமைந்திருந்தது. இது தொடர்பில் அரசாங்கத்தின் கருத்தானது ஆயுதங்கள் களையப்பட்டு விட்டதாகவும் அவர்கள் சட்டத்திற்குட்பட்டவாறு அரசியல் கட்சியாக தேசிய அரசியல் நீரோட்டத்தில் இணைந்து விட்டதாகவும் தெரிவித்துள்ளதாக அமைகிறது. ஆனால் உண்மை நிலையில் அரசாங்கம் முன்னாள் போராளிகளான பிள்ளையான், கருணா அணியினரை ஆளும் அரசாங்கத்துடன் இணைத்ததுடன் அரசாங்கத்தின் துணை ஆயுதக்குழுக்களாக தொடர்ந்து புலிகளுக்கு எதிரான ஆயுத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியது. மேற்படி நிலையே கிழக்கு மாகாணத்தில் சட்டத்திற்கு புறம்பான கப்பம் கோரல், வரி அறவிடல், கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் என்பனவற்றுக்கு காரணம் என ஆய்வு சுட்டிக்காட்டுகிறது (ICG :1-4, 2009).

The University of York இனால் மேற்கொள்ளப்பட்ட "An Evaluation of Post War Recovery In Eastern Sri Lanka Batticaloa District" என்ற ஆய்வின் பிரகாரம் இலங்கையில் யுத்தத்தின் பின்னரான DDR செயன்முறையானது அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. DDR செயன்முறையானது பொறுத்தவரை உலக நாடுகளில் இடம்பெறுகின்றதையொத்த சர்வதேச தரத்திலான DDR நெறிமுறைகளையொத்த ஓர் செயன்முறையை UN இன் உதவியுடன் அல்லது அதற்கு இணையான வெளிவாரியான உதவியுடன் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக அரசாங்கத்தின் தலைமையில் பாதுகாப்பு பிரிவினர் ஒரு சில NGO மற்றும் INGO களின் உதவியுடன் DDR செயன்முறையின் மூலம் பெறக்கூடிய விளைவுகளை ஒத்ததான நோக்கை கொண்ட மீள் ஒருங்கிணைத்தல் செயன்முறைகள் இடம் பெற்றமை உறுதிப்படுத்தப்படுகிறது. குறிப்பாக National Action Plan of the National Framework Proposal for Reintegration of ex combatant into civilian life in Sri Lanka(NAP) எனும் செயற்திட்டத்தை அடையாளப்படுத்த முடிகிறது.இலங்கையில் யுத்தத்தின் பின் சமாதானத்தை கட்டியெழுப்பும் அகன்ற செயன்முறையின் ஒரு பகுதியாக DDR செயன்முறை இடம்பெறவில்லை மாறாக புலிகளை யுத்தத்தின் மூலம் இராணுவரீதியாக வெற்றி பெற்றதன் தொடர்விடயமாகவே இடம்பெற்றது. அது மட்டுமின்றி ஆயுதக்களைவு, ஆயுத படைகளைக் கலைத்தல் போன்ற அடிப்படையான செயன்முறைகள் மீது கவனம் செலுத்தப்படவில்லை மாறாக மீள் ஒருங்கிணைத்தல் செயன்முறை மாத்திரம் இடம் பெற்றுள்ளதாக அமைகிறது.

2012 இல் Madakalapuge Lakshan Anuruddhika De Silva எழுதிய "Reintegration of Former Liberation Tigers of Tamil Eelam Combatants into Civilian Society in Post War Sri Lanka" என்ற நுலில் இலங்கையில் யுத்தத்தின் பின்னரான DDR செயன்முறையில் ஒரு பகுதியான மீள ஒருங்கிணைத்தல் செயன்முறை ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இது ஒப்பீட்டு ஆய்வு முறை மூலம் ஏனைய நாடுகளில் இடம் பெற்ற மீள் ஒருங்கிணைத்தல் செயன்முறைகளுடன் ஒப்பீட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. எனினும் இவ் ஆய்வானது DDR குறித்த ஓர் முழுமையான ஆய்வாக அன்றி அதன் ஒரு பகுதியான மீள ஒருங்கிணைத்தல் செயன்முறை பற்றியதாகவும் அதிலும் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் யுத்தத்தின் போது சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்ட EX-LTTE உறுப்பினர்கள் பற்றியதான நாடளவிய முறையில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஒப்பீட்டு ஆய்வாகும்.இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட PARC (Protective Accommodation and Rehabilitation centre) முறையிலான மீள் ஒருங்கிணைத்தல் செயன்முறையின் முக்கியமான குறைபாடுகளையும் பரிந்துரைகளையும் இவ் ஆய்வு முன்வைத்த விதம் போதுமானதாக அல்லது வெளிப்படைத்தன்மையாக அமையவில்லை(Lakshan Anuruddhika De Silva 2012).

Tamil Against Genocide(Europe)Ltd 2014 இல் வெளியிட்ட "Sri Lanka's Rehabilitation of the Liberation Tigers of Tamil Eealam" எனும் அறிக்கையில் இலங்கையில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட மீள் ஒருங்கிணைத்தல் செயன்முறை என்பது சுதந்திரம், பாதுகாப்பு, வெளிப்படைத்தன்மை குன்றியதொரு முறையாகும் எனக் குறிப்பிடப்படுகின்றது. முழுமையான மீள் ஒருங்கிணைத்தல் செயன்முறையைப் பற்றிய ஆய்வாக அமையாமையும் குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

ஒட்டுமொத்தமாக நோக்குகின்ற போது DDR எண்ணக்கரு தொடர்பான கோட்பாட்டு மற்றும் நடைமுறை ரீதியான ஆய்வுகள் கணிசமான அளவு இடம்பெற்றுள்ளதுடன் இவை யுத்தத்தில் ஈடுபட்ட தரப்பினரை மோதல் நிலையிலிருந்து சமாதானத்திற்கு கொண்டு வருகின்ற செயன்முறையில் வெற்றி தோல்வி என இருவகையான விளைவுகளையும் பெற்றுள்ளது. இதன்படி இலங்கையில் யுத்தத்திற்கு பின்னரான DDR செயன்முறை தொடர்பான ஆய்வுகள் பகுதியளவிலானதாகவும் ஒன்றுக்கொன்று முரன்பட்டவையாகவும் தெளிவற்றதன்மை, விளக்கக்குறைபாடு முதலானவற்றை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. இவை

அமுலாக்கத்தின் போது எதிர்நோக்குகின்ற உள்நாட்டு சூழ்நிலைகள், பிரத்தியேகமான நடைமுறைச் சிக்கல்கள் போன்றவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பன தொடர்பில் தேவையான பரிந்துரைகளை கொண்டதாக அமையவில்லை. மேலும் DDR செயன்முறையின் முக்கியமான இரு அம்சங்களான Disarmament, Demobilization (DD) குறித்த ஆய்வுகளை விட Reintegration குறித்த ஆய்வுகளே முக்கியத்துவப்படுத்தப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. அத்தோடு Reintegration குறித்த ஆய்வுகளும் ஒன்றுக்கொன்று முரணான தகவல்களை தருவதுடன் முழுமையற்றவையாகவும் காணப்படுகின்றன.

யுத்தத்திற்கு பின்னரான கிழக்கிலங்கையில் இடம்பெற்ற ஆய்வுகளின் மீளாய்வுகளில் இருந்துகிழக்கில் இறுதி யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் இடம்பெற்ற DDR செயன்முறைகுறித்ததானஆய்வுகள் குறைவாகக் காணப்படுவதுடன் போதியளவு தகவல்களையும் பெறமுடியவல்லை. அத்தோடு கிழக்கில் செயற்பட்ட துணை ஆயுதக்குழுக்களான TMVP, கருணா அணியினர் போன்றோர் DDR செயன்முறைக்குட்படுத்தப்பட்டனரா என்ற கேள்விக்கும் விடைகாண முடியாத நிலையே காணப்படுகிறது. எனவே மொத்தமாக பார்க்கின்ற போது கிழக்கில் தளபதியாக இருந்த கருணா அமைப்பினரின் உயர் இராணுவ பாதுகாப்பரண்கள், பாசறைகள், ஆயுதங்கள் மற்றும் அமைப்பின் போராளிகளுக்கு யுத்தத்தின் பிற்பாடு என்ன நடந்திருக்கிறது என்பதனை பார்ப்பது இன்றைய யுத்தத்திற்கு பின்னரான இலங்கை குறித்த ஆய்வில் முக்கியம் பெறகின்றது.

**References**


1) International Crisis Group. (2009). “Development Assistance and Conflict in Sri Lanka: Lessons from the Eastern Province”, (Asia Report N 165). Retrieved from http//www.crisisgroup.org. On 16 April 2009.

2) Luc Reychler & Thaniya Paffenholz. (397-415). “Peace-Building-A Field guide”, Lynne rienner Publishers, USA, 401-415.

3) The University of York. (2011). “An Evaluation of Post War Recovery in Eastern Sri Lanka Batticaloa District”, (Master’s Thesis Field Report, University of York, Heslington, York, UK). Retrieved from http//www.york.ac.uk. On 10 April 2014, pp.3-54.

4) United Nations. (2000). “Disarmament, Demobilization and Reintegration of Ex-Combatants in a Peacekeeping Environment, Principles and Guidelines”, New York, UNDPKO, pp.15-103.

5) Aliff,S.M. (2014). “Disarmament, Demobilization and Reintegration(DDR) in Post-Conflict Societies” kalam,vol III(I),10-19.

6) Fragile States Unit. (2011). The Role of Disarmament, Demobilization and Reintegration Programs in Post-Conflict Reconstruction: Some Lessons Learnt, African Development Bank Group, pp.1-4.

7) Colin Gleichmann, Michael Odenwald, Kees Steenken, Adrian Wilkinson.(2004). Disarmament, Demobilisation and Reintegration A Practical Field and Classroom Guide, GTZ, NODEFIC, PPC, SNDC, pp.12-98.

8) Anan, K. (1998). “The Causes of Conflict and the Promotion of Durable Peace and Sustainable Development in Africa”, (UNS/1998/318).

9) Boutros-Boutros Ghali, (1992). “An Agenda for Peace, Preventive Diplomacy, Peace-making and Peacekeeping”, New York, United Nations.

10) Cousens, E.M & Kumar. (2001). Peacebuilding as Politics: Cultivating Peace in Fragile Societies, Boulder, and Lynne Rienner Publishers.

11) Haugerrudbraaten, H. (1998). “Peacebuilding: Six Dimensions and Two Concepts”, African Security Review, Vol. 7, No.6.

12) Tamils Against Genocide. (2014). Sri Lanka’s Rehabilitation of the Liberation Tigers of Tamil Eelam a Programme of Physical and Mental Pacification, pp.2-24.

13) Mada Kalapuge Lakshan Anuruddhika De Silva (2012). Reintegration of former liberation tigers of tamil eelam combatants into civilian life society in post war Sri lanka, Naval Postgraduate School, pp.1-91.

14) The Coalition and The Watchlist. (2010). Children affected by Armed Conflict in Sri Lanka: Recommendations to the Security Council Working Group, pp.1-5.

15) Nicole Ball & lucvanDe Goor. (2006). Disarmament, Demobilization and Reintegration Mapping Issues Dilemmas and Guiding Principles, Netherland Institute of International Relations, Clingendael, Conflict Research Unit, pp.2-23.